இந்திய தேர்தல் ஆணையம்
Election Commission of India

தேர்தல் திருவிழா
தேசத்தின் பெருவிழா
மக்களவை தேர்தல் – 2024



திறன் மிக்க வாக்காளராகுங்கள்

# வாக்காளர் கையேடு

வாக்களிப்பதே சிறந்தது, நிச்சயம் வாக்களிப்பேன்

# பசுமை தேர்தல்

SUSTAINABLE ELECTIONS PUDUCHERRY 2024

I VOTE FOR SURE

#WalkToVote

## வாக்காளர்களுக்கு ஒரு வேண்டுகோள்

இரு சக்கர வாகனத்தில் 1 கிமீ தூரம் பயணிப்பதால் 43 கிராம் $CO_2e$ வெளிப்படுகிறது. ஒரு கார் ஒவ்வொரு கிமீக்கும் 180 கிராம் $CO_2e$-ஐ வெளியிடுகிறது. நடைபயிற்சி எவ்வளவு $CO_2e$ வெளியிடுகிறது தெரியுமா? பூஜ்யம்!

இந்தத் தேர்தலில், தேர்தல்களின் கார்பன் அடிச்சுவட்டைக் குறைக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்: காகிதப் பயன்பாட்டைக் குறைத்துள்ளோம், முடிந்தவரை பொருட்களை மீண்டும் பயன்படுத்தினோம், வாகனப் பயன்பாட்டை குறைத்து, நிலையான தேர்தல்கள் என்ற செய்தியை வெகு தொலைவில் பரப்பியுள்ளோம்.

புதுச்சேரியில் 10.2 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். நாம் அனைவரும் #WalkToVote செய்தால், 40 டன்கள் முதல் 180 டன்கள் வரை $CO_2e$ வெளியேற்றத்தைத் தடுக்கலாம்.

வாருங்கள்! இயக்கத்தின் ஒரு பகுதியாகுங்கள்!! இந்த ஏப்ரல் 19 ஆம் தேதி, வாக்காளராகிய நீங்கள், உங்கள் வாக்குச் சாவடிக்கு நடந்து செல்வதன் மூலம் நிலையான தேர்தலுக்குப் பங்களிக்க முடியும். "#WalkToVote - நடந்து சென்று வாக்களிப்போம்!"

**தலைமை தேர்தல் அதிகாரி, புதுச்சேரி**

# வாக்குப்பதிவு நாள்

விடுமுறை

வாக்களிப்பதற்கு வசதியாக வாக்குபதிவு நாளன்று பொது விடுமுறை அளிக்கப்படும்

**இது விடுமுறை நாளல்ல வாக்களிக்கும் நாள்!**

வாக்குச்சாவடிக்குள் மின் சாதனப் பொருட்கள் கொண்டு செல்ல அனுமதியில்லை

உங்கள் வாக்குச்சாவடியின் அமைவிடம் பற்றி அறிய

voters.eci.gov.in

வாக்காளர் உதவிமையத்தை அழைப்பதற்கு 1950

வாக்காளர் உதவிமைய செயலி

## கீழ்க்கண்ட ஏதேனும் ஓர் சான்றளிக்கப்பட்ட அடையாள ஆவணம் / அடையாள அட்டையை எடுத்துச் செல்லுங்கள்

- புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை (EPIC)
- ஆதார் அட்டை
- நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN card)
- மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை மத்திய / மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்களால்/ வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களால் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள்
- புகைப்படத்துடன் கூடிய வங்கி / அஞ்சலக கணக்குப் புத்தகங்கள்
- மத்திய அரசின் தொழிலாளர் நல அமைச்சக திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு ஸ்மார்ட் அட்டை
- ஓட்டுநர் உரிமம்
- தேசிய மக்கள்தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட ஸ்மார்ட் அட்டை
- ஓய்வூதிய ஆவணம்
- பாராளுமன்ற/ சட்டமன்ற/ சட்ட மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அலுவலக அடையாள அட்டை
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அட்டை



cVIGIL செயலியின் மூலம் சட்டவிரோதமான செயல்களைப் பற்றி புகாரளியுங்கள்

# வாக்களிப்பதற்கான வழிமுறை

1



வாக்காளர் வரிசையில் நிற்கவும்

2



முதலாவது வாக்குப்பதிவு அலுவலர் வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரையும், அடையாள அட்டையையும் சரிபார்ப்பார்

3



இரண்டாவது வாக்குப்பதிவு அலுவலர் அழியாத மையினால் உங்கள் கைவிரலில் மையிட்டு, துண்டு சீட்டை அளித்து உங்களின் கையொப்பத்தைப் பெறுவார்

4



மூன்றாவது வாக்குப்பதிவு அலுவலர் துண்டு சீட்டைப் பெற்றுக்கொண்டு கைவிரலில் உள்ள மையைச் சரிபார்ப்பார்

5



வாக்காளர் வாக்குப்பதிவு இயந்திரத்தில் தனக்கு விருப்பமான வேட்பாளர் அல்லது NOTA-விற்கு எதிரே உள்ள பொத்தானை அழுத்தும் பொழுது சிகப்பு நிற விளக்கு ஒளிரும்

NOTA

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் (இவர்களில் எவரும் இல்லை) (NOTA) என்ற தெரிவு இறுதியில் இருக்கும்

NOTA

# உங்கள் வாக்குகளை பதிவு செய்வதற்கு

## 1




### வாக்களிக்க தயார்

நீங்கள் வாக்களிக்கும் பகுதிக்குள் நுழையும் பொழுது, மூன்றாவது வாக்குப்பதிவு அலுவலர் வாக்குப்பதிவு கருவியை இயக்குவார். தயார் நிலையில் (Ready) வாக்குப்பதிவு கருவியில் உள்ள விளக்கு ஒளிரும்.

## 2



### உங்கள் வாக்கினை பதிவுசெய்யுங்கள்

வாக்குப்பதிவு கருவியில் நீங்கள் தேர்ந்தெடுக்க விரும்பும் வேட்பாளரின் பெயர்/ சின்னத்தின் அல்லது NOTA எதிரே உள்ள நீல நிற பொத்தானை அழுத்தவும்

## 3



### ஒளிரும் விளக்கை காணவும்

தெரிவு செய்யப்பட்ட வேட்பாளரின் பெயர் / சின்னம்/ NOTA விற்கு எதிரே உள்ள சிவப்பு நிற விளக்கு ஒளிரும்.

## 4




### உங்கள் வாக்கினை சரிபாருங்கள்

தெரிவு செய்யப்பட்ட வேட்பாளரின் வரிசை எண், பெயர், சின்னம் உள்ள ஒரு துண்டுச் சீட்டு வாக்களிப்பை சரிபார்க்கும் காகித தணிக்கை சோதனையில் தெரியும்

## 5



### 'பீப்' ஒலியைக் கேளுங்கள்

கட்டுப்பாட்டுக் கருவியில் இருந்து வரும் 'பீப்' சத்தம் வாக்களித்ததை உறுதி செய்யும்.

- வாக்களிப்பை சரிபார்க்கும் காகித தணிக்கை சோதனையின்போது துண்டு சீட்டினை பார்க்கவில்லை என்றாலோ அல்லது 'பீப்' சத்தம் கேட்கவில்லை என்றாலோ வாக்குச்சாவடி தலைமை அலுவலரை தொடர்பு கொள்ளவும்
- அச்சிடப்பட்ட துண்டுசீட்டு கண்ணாடி வாயிலாக ஏழு வினாடிகள் தெரியும். இச்சீட்டு வாக்களிப்பை சரிபார்க்கும் காகித தணிக்கை சோதனை கருவியில் பாதுகாக்கப்படும்



# இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டி சேவை செயலிகள்

## சக்ஷம் செயலி



- உள் கட்டமைக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள்
- மாற்றுத்திறனாளி என குறித்தல்
- புதிய மாற்றுத்திறனாளி வாக்காளராகப் பதிவு செய்வதற்கு புதிதாக விண்ணப்பிக்கவும்
- சக்கர நாற்காலிக்காக விண்ணப்பிக்கவும்

## வாக்காளர் உதவிமைய செயலி



பெயர்பதிவு மற்றும் தேர்தல் தொடர்பான சேவைகளுக்கான வசதிகளைப் பெறுவதற்கான ஒற்றைச் சாளர சேவை

போட்டியிடும் வேட்பாளர்களின் விவரங்களை சரிபார்க்கவும்

உங்கள் வாக்காளர் தகவல் சீட்டை பெறுவதற்கு

## உங்கள் வேட்பாளர் பற்றி அறிந்து கொள்வதற்கான செயலி



உங்கள் தொகுதியின் ஒவ்வொரு வேட்பாளர்களின் உறுதி ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களான தகுதி, குற்றப் பின்னணி, சொத்துக்கள் மற்றும் கடன்கள் (ஏதேனும் இருந்தால்) குறித்து அறிந்து கொள்ளுங்கள்



## cVIGIL செயலி

- தேர்தல் அறிவிக்கப்படும் நாளில் இச்செயலியானது செயல்பாட்டிற்கு வரும்
- சட்டவிரோதமான செயல்கள்/ மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் மீறல் குறித்து புகாரளியுங்கள்
- இச்செயலி கைப்பேசி மூலம் இணைக்கப்பட்டுள்ளது

## மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்களுக்கான
# உறுதியளிக்கப்பட்ட குறைந்தபட்ச வசதிகள்

- சாய்தளம் மற்றும் சக்கர நாற்காலி
- பிரெய்லி எழுத்துக்களுடன் கூடிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்
- சிறப்புத் தன்னார்வலர்
- வாக்களிப்பதில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களுக்கு முன்னுரிமை
- மாற்றுத் திறனாளிகளுக்கு போக்குவரத்து வசதி
- சைகைமொழி



## வீட்டிலிருந்தே வாக்களிக்கும் வசதி / தபால் வாக்கு வசதி

வீட்டிலிருந்தே வாக்களிக்கும் வசதியை வாக்காளர்கள் (85 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள், அறிவிக்கப்பட்ட அத்தியாவசிய சேவைகளில் பணிபுரியும் வாக்காளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிக்கான சான்றிதழ் பெற்றோர்) படிவம் 12D-ன் மூலம் விண்ணப்பித்து பெறலாம்.

# வாக்காளர் உறுதிமொழி

மக்களாட்சியின் மீது பற்றுடைய இந்தியக் குடிமக்களாகிய நாம், நம்முடைய நலன் கருதும் மரபுகளையும், சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான தேர்தல்களின் மாண்பையும் நிலைநிறுத்துவோம் என்றும், மேலும் ஒவ்வொரு தேர்தலிலும் அச்சமின்றியும், மதம், இனம், சாதி, வகுப்பு, மொழி ஆகியவற்றின் தாக்கங்களுக்கு ஆட்படாமலும் அல்லது எந்தவொரு தூண்டுதலுமின்றியும் வாக்களிப்போம் என்றும் உறுதி மொழிகிறோம்.

தேர்தல் திருவிழா
தேசத்தின் பெருவிழா
மக்களவை தேர்தல் - 2024

வாக்காளர் பட்டியலில்
## உங்கள் பெயரை தேடுங்கள்

வாக்காளர் உதவிமைய செயலி

voters.eci.gov.in

1950 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி
ECI<space> <EPIC No>



நீங்கள் வாக்களிப்பதற்கு வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரை பதிவு செய்திருக்க வேண்டும்

உறுதியாக வாக்களிப்பேன் !

வாக்காளர் உதவி மைய எண்
**1950**

ceopuducherry @ceopuducherry Chief Electoral Officer, Puducherry @ceopuducherry Chief Electoral Officer, Puducherry